RECEIVED
PERIODICALS DIVISION
UNIVERSITY OF ...

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 | வைகாசி 8 | றஜப் 6 | இதழ் 101
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 21-5-80

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

### உண்மையை ஏற்க சிறிமா அஞ்சுகிறார்

#### பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பதில்

[கொழும்பு]

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஜனாதிபதி கமிஷன் தம்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கத் தம்மால் முடியாத காரணத்தினாலேயே கமிஷன்முன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா மீது சுமத்தப்பட்ட அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி (2-ம் பக்கம் பார்க்க)

# பொத்துவில் எம். பி. பதவி:

# கூட்டணி நீதிமன்றம் செல்கிறது

## இன்று மனு தாக்கலாகும்

(கொழும்பு)

பொத்துவில் தொகுதி எம். பி. யாக இருந்த கனகரத்தினத்தின் மறைவால் காலியான பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தமது கட்சிக்கே அளிக்கவேண்டுமென்று நீதிமன்றம் மூலம் கோருவதென்று தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான மனு ஒன்றை கூட்டணி இன்று அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளது.

இலங்கையின் அரசியல் அமைப்பில் தொகுதி வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரத்தில் தேர்தல் ஆணையாளர், குறிப்பிட்ட வெற்றிடம் யாரால் ஆக்கப்பட்டதோ அக்கட்சியின் செயலாளரிடமே அந்த வெற்றிடத்தை நிரப்புமாறு கோரவேண்டும்—

குறிப்பிட்ட எம். பி. தெரிவு செய்யப்பட்டபோது எந்தக் கட்சியில் இருந்தார் என்றோ, புதிய அரசியல் அமைப்பு அமுலுக்கு வந்தபோது அவர் எக்கட்சியிலிருந்தார் என்றோ அன்றி அவர் இறந்தபோது எந்தக் கட்சியிலிருந்தார் என்றோ வாதிடுவது அர்த்தமற்றது தெரிவு செய்யப்பட்டபோது அவர் எந்தக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பதே இங்கு முக்கியமான கேள்வியாகும்.

மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதுதான் அரசியல் அமைப்பின் முக்கிய நோக்கம். இதன் அடிப்படையில் பொத்துவில் தொகுதி தமிழர் கூட்டணிக்கே வழங்கப்படவேண்டுமென அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## பொத்துவில் தொகுதி யு. என். பிக்கே?

(கொழும்பு)

பொத்துவில் தொகுதி எம். பி. பதவியை ஐ. தே. கட்சிக்கே ... இன்று ... கூடி பொத்துவில் ... தொகுதியின் புதிய எம். பி. ... என்று தேர்தல் ஆணையாளர் ... தெரிவு செய்யவேண்டுமென தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. ... எதிர்பார்க்கப்படுகிறது [ம-இ]

## மகாவலித திட்டத்தில் வெங்காயச் செய்கை!

### வடக்கிலிருந்து 40 தொன் விதை!

(யாழ்ப்பாணம்)

மகாவலித் திட்டத்தின்கீழ் வெங்காயச் செய்கைக்கென தொன் பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து 40 தொன் விதை (3-ம் பக்கம் பார்க்க)



யாழ். சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் 1-ம் எதிரி ராஜன் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டபோது படப்பிடிப்பாளரை கண்டதும் கைகளால் முகத்தை மறைப்பதை முதல் படத்திலும், பின் 'ஈழநாடு' நிருபர் என்றதும் கைகளை விலத்தி 'ஸ்டைலாக' நின்று 'போஸ்' கொடுப்பதை இரண்டாம் படத்திலும் காணலாம். (படம்-விசாகன்)

### ரியூட்டரி மாணவி கொலை வழக்கு:

# 1ம் எதிரி ராஜன் ரகசிய வாக்குமூலம் அளித்தார்!

## பத்திரங்கள் தாக்கலாகாததால் விசாரணை ஒத்திவைப்பு



கொலையுண்ட மாணவி கமலம்

(புலோலி)

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கில் 1ம் எதிரியான ராஜ்குமார் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசனுக்கு நேற்று பிற்பகல் இரகசிய வாக்குமூலமொன்றை அளித்தார்.

இவ்வழக்கு நேற்று பிற்பகல் பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது றிமாண்டிலிருந்த 1ம் எதிரி ராஜனும், பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட 2ம் எதிரி பொன்சியஸ் பெர்னாண்டோவும் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

1-ம் எதிரி ராஜன் தான் இரகசிய வாக்குமூலம் ஒன்று அளிக்க விரும்புவதாக நீதவானிடம் கோர்ட்டில் தெரிவித்ததையடுத்தே அவருக்கு இரகசிய வாக்குமூலம் அளிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இவ் வழக்கில் ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் 80ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் தேதி பொலிகண்டி ரியூட்டரி மாணவி இராமச்சந்திரன் கமலத்தை கொலைசெய்ததாகவும், அம் மாணவி அணிந்திருந்த 5600 ரூபா பெறுமதியான தங்க நகைகளை ... ததாகவும் ராஜ்குமார் (ராஜன்), பொன்சியஸ் பெர்னாண்டோ ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை. 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசா, சட்டத்தரணி ஆர். சிறிவோயா, சட்டத்தரணி ஆர் இரத்தினசிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

பொலிஸாரினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய தகவல் புத்தகத்திலுள்ள சாட்சியங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படாததனால் விசாரணை ஜூன் மாதம் 3ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் கமலத்தின் தாயாரும் வந்திருந்தார். பெருந்திரளான மக்களும் கூடியிருந்தனர். (நெ-நி-க)

### வானொலியில் எம். ஜி. ஆர். இன்று

(சென்னை)

தமிழக தேர்தல் வானொலிப் பிரசாரத் தொடரில் இன்று இரவு அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உரையாற்றுகிறார்.

## காணி விற்பனைக்கு

நாவற்குளி அரிசிக் களஞ்சியத்திற்கு முன்பாகவுள்ள அமிர்தா வீதியில் 100 யார் தொலைவில் 40 பரப்பு காணி விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ளவும்

V. SARVASAGTHIVEL.
Kaithady South,
Kaithady.

5833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தம்புதிய HONDA C D 200 (Roadmaster பதிவு செய்யப்படாதது) உடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். சி. ஜெயக்குமார், தனவத்தை, அச்சுவேலி. 5821

2 சிறீ மொடல் வொக்ஸ்வேகன் கார் ஒன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 74, ஸ்ரான்லி றோட், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். 5831

## பயிற்சி

றேடியோ — டெலிவிசன் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி நெறி — ஏயர்கொண்டிசனிங் (Air-Conditioning & Refrigeration) 8 மாத டிப்பிளோமா பயிற்சி நெறி P M G.' S Certificate, பயிற்சி நெறி எலக்றிக் வெல்டிங் டிப்பிளோமா பயிற்சி ஆகியன ஆரம்பம் 28-5-80. அனைவரும் விண்ணப்பிக்கலாம் உடன் தொடர்பு கொள்ளவும். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5819

## தேவை

20,000 தொன் பனம் பன்னூடைகளும், கொக்கரைகளும் உடன் தேவை. மாதிரிகளுடனும் விலை விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விலாசம்: இயக்குனர், நோதேன் எக்ஸ்போட்டேஸ் லிமிட்டெட், வசாவிளான். 5841

புடவை வியாபாரத்தில் அனுபவமிக்க பெண் விற்பனையாளர்கள் தேவை. க. பொ. த. பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது. இம்மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மனேஜர், மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 5843

மின்பிடி வலைகள் வியாபாரத்தில் அனுபவமிக்க இளைஞர்கள் தேவை. இம்மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மணியம்ஸ், 15, யூபிலி பஜார், யாழ்ப்பாணம். 5842

## கல்வி

உள்வெளி நாடுகளில் மின்சார வேலை பெற ஆறு வாரங்களில் Electrician's Diploma நான்கு வாரங்களில் Electrical-Wiring And Contracting Diploma. நுட்ப தொழில் பாடசாலை பதிவு 3580 இலக்கம் 1956 ஆண்டு 53(30) டேவிட் வீதி, யாழ்ப்பாணம் (பத்திரிக்ஸ் கல்லூரிக்கு மேற்கே) 5830

## வெற்றுச் சாக்கு விற்பனைக்குண்டு

வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட சுமார் 7000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வெற்றுச் சாக்கை பெறவிரும்புவோர் வைப்புப்பணமாக 100/- ரூபாவும் விண்ணப்பப் பத்திரத்திற்கு 5/- ரூபாவும் மொத்தம் 105/-ரூபா 23-5-80 திகதிக்கு முன்னர் கட்டி விண்ணப்பப் பத்திரத்தையும் அன்று கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் விண்ணப்பப் பத்திரத்தின் இடது பக்க மூலையில் வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம் என்று குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
வலி கிழக்கு வட பகுதி ப. நோ கூ.சங்கம் அச்சுவேலி
5884

# 3-ம் கட்ட இலவச பாடப் புத்தக விநியோகம் ஆரம்பம்

(நெல்லியடி)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலும், 3ம் கட்ட இலவச பாட புத்தக விநியோகத்தை ஆரம்பித்துள்ளது.

தூவ்வாரம் ஆரம்பித்த விநியோகத்தில் சமயம், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடப்புத்தகங்கள் அடங்கியிருந்தன.

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் இம்மாதம் 21ம் திகதி மாணவர்களுக்கு இப்புத்தகங்கள் வழங்கப்படும் என்று மேற்படி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் தெரிவித்துள்ளார்.

(மன்னார்)

மன்னார் ஸ்ரேசன் வட்டாரத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் இம்மாதம் 25 ம் திகதி நடைபெறவிருக்கிறது. (ஈ)

# கோட்டு விற்பனவு விளம்பரம்

## யாழ்ப்பாணம் மாவட்ட மன்றம்

வழ. இல. M B / 519

சந்திரசேகரம் தாமோதரம்பிள்ளை, சரஸ்வதிப்பிள்ளை
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

வழக்காளிகள்

எதிராக

கார்த்தி செகலத்துரை
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் M B/519-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 11-ந் திகதி (11-06-1980) புதன்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அத்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 2200/-வும் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு பத்து வீத (10 %) வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977 ம் ஆண்டு ஆடிமாதம் 11-ந் திகதியிலிருந்து முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை 10 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 582-65 சகம் கொடுக்க வேண்டியிருப்பதாலும் (எதிராளி ரூபா 1000/- செலுத்தியுள்ளார்)

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கு இறை.

"கருமன் புலம்" நில. பர. 36½ முப்பத்தாறரை எல்லை கிழக்குஒழுங்கையும் டண்டாரி பூதனின் ஆதனமும், வடக்கு மலுவரசயர் கந்தையாவின் உரிமைக்காரரின் ஆதனமும் ஒழுங்கையும், வி சுப்பிரமணியம் கந்தையா பெண் தவமணியின் ஆதனம். மேற்கு சோமாஸ்கந்தா தர்மகர்த்தா ஆதனமும் சுப்பிரமணியம் அம்பலவாணரின் ஆதனமும் முத்துச்சாமி குமாரசாமியின் ஆதனமும், தெற்கு ஒழுங்கையும் மலுவராயர் கந்தையாவின் உரிமைக்காரரின் ஆதனமும் இதடங்கலில் சொரியலாய் ¼ நாலிலொரு பங்கும் அதற்குரியவைகளும்

சி. செ. பாலசிங்கம்
(கொமிஷனரும், மதிப்பாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
12-05-1980. 5837

# கிளிநொச்சியில்

சகல ரக புதிய

## ஹொண்டா மோட்டார் சைக்கிள்களையும்

உத்தரவு பெற்ற எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். முற்பணம் செலுத்தி விரும்பிய ரகங்களைப் பெறவும் வசதி செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க:

## சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி, : பரந்தன்.

5829

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

# கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் கழிவு கடதாசி கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. விண்ணப்ப முடிவு திகதி 31-5-80.

மேலதிக விபரங்களை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# நைஜீரியா செல்கிறார்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி உப அதிபரான திருமதி. மங்கையர்க்கரசி அருளையா ஆங்கிலக் கல்வி அதிகாரியாகப் பதவி ஏற்று நைஜீரியாவுக்குப் பயணமாகின்றார்.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இவர் திருச்சியில் பட்டப் படிப்பை மேற்கொண்டார். 1954ல் கல்வி பயின்ற பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியிலேயே ஆசிரியையாகவும் பதவியேற்றார் மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர் பாடசாலை உப அதிபராகவும், கொழும்பு சென். அன்ரனிஸ் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும் பணியாற்றினார்.

# சுங்க விசாரணை

(மன்னார்)

சுமார் 85 ஆயிரம் ரூபா பெறுமதியான பெருமளவு இந்தியப் பொருட்களை சுங்க அனுமதிபெறுமல் வைத்திருந்த 15 பேரை தலைமன்னார் பொலிசார் கைதுசெய்தனர். சுங்க விசாரணை நடைபெறுகிறது

மன்னார் அரசாங்க அதிபர் திரு கமிலஸ் பெர்னாண்டோ கச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு.ஆறுமுகம் சகிதம் தலைமன்னார் பியருக்குவிஜயம் செய்து அங்கு நடைபெறும் சுங்க பரிசோதனையைப் பார்வையிட்டார்.

# வைத்தியசேவை

(மன்னார்)

மன்னார் அரசாங்க அதிபர் திரு.கமிலஸ் பெர்னாண்டோ பெரிய குஞ்சுக்குளம் கிராமத்தில் நடமாடும் வைத்திய சேவை ஒன்றை ஆரம்பித்து வைத்தார்.

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

# அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 4000 ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவுமா, கழிவு சீனி, கழிவுப் பொருட்கள் ஆகியனவும் கேள்விப்பத்திர மூலம் விற்கவிருக்கின்றன. வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 250/- உம் ஏனையவற்றிற்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 50/- உம் காரியாலய வேலை நாட்களில் தலைமை அலுவலகத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 28 - 5 - 80 புதன்கிழமை நண்பகல் 12 - 00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் பல.நோ. கூ.சங்கம்
19 - 5 - 80

## அலுவலகக் கைக்கதிரைகள் விநியோகம்

## சுன்னாகம் பட்டணசபை

சுன்னாகம் பட்டணசபையின் பொது நூல்நிலையத்திற்கு முதிரை மரத்தால் செய்யப்பட்ட அலுவலகக் கைக்கதிரைகள் 60 செய்து விநியோகிப்பதற்கான கேள்விகள், அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில் 2-6-80 நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை ரூ 5/- செலுத்தி, நேரிலோ கடிதமூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

பொ. பாலசிங்கம்
விசேட ஆணையாளர்,
சுன்னாகம் பட்டணம்.
பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்.
19-5-80. 5836

# பதவி வெற்றிடங்கள்

வெளிநாட்டிற்கு கைப்பணிப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனத்திற்கு கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு சேர விரும்புவோர் விண்ணப்பிக்கவும் சம்பளம் ரூபா 250/- முதல் ரூபா 400/- வரை வழங்கப்படும். பதவிகள்,

1. கைப்பணிப் பொருட்கள் செய்பவர்கள்
2. படம் வரைபவர்கள்
3. மூலப்பொருள் கொள்வனவாளர்கள்
4. மேற்பார்வையாளர்
5. பொருட்களை போத்தல்களில், பைக்கற்றுகளில் அடைப்பவர்கள்
6. பொருட்கள் விநியோகிக்கும் டையன்கள்
7. அலுவலகப் பியோன்

விலாசம்: இயக்குநர்

## நோதேன் எக்ஸ்போட்டேஸ் லிமிட்டெட்

வசாவிளான்

5340

# நாடக அரங்கக் கல்லூரி

ரசிகர் அவையின் இரண்டாவது கட்டம் ஆரம்பம்

முதலாவது நாடகமாக

## குழந்தையின் "உறவுகள்" (நாடகம்)

22 5 80 வியாழன்மாலை 6-45 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்

பிரவேசம் ரூபா 5-, 3,-

ஆண்டொன்றுக்குத் தரமான நாடகங்கள் ஆறு.

| | | |
|---|---|---|
| உறுப்பினர் கட்டணம் தனியார் | ரூபா | 20/- |
| இருவர் | " | 35/- |
| 15 வயதுக்குட்பட்டோர் | " | 15/- |

உறுப்பினர் கட்டணத்தைத் தவணை முறையிலும் செலுத்தலாம். மண்டப வாயிலில் உறுப்பினராகச் சேரலாம். ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்களும் மண்டபத்தில் உறுப்பினர் அட்டையைப் பெறலாம்.

5839

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆத்மன் ஒளிப் பிழம்பு அதுவே உலகத்துக்கும் பிரகாசத்தை தருகிறது. ஜீவனின் அஞ்ஞான இருளையும் நீக்குகிறது.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### நிவாரணம் கிடைக்குமா?

தேசிய வீடமைப்புத் திணைக்களத்திடமிருந்து, குடியிருப்பதற்காக வீடொன்றை கொள்வனவு செய்ய 79ம் ஆண்டு மார்கழி மாதம் விண்ணப்பப் பத்திரம் ஒன்று வாங்கி, அதைப்பூர்த்தி செய்து அத்துடன் 1000 ரூபாவுக்கு மேல் செலவு செய்து சகல சான்றுப் பத்திரங்களும் இணைத்து இவ் வருஷம் தை மாதம் 29ம் திகதி யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்கள காரியாலயத்திற்கு கொண்டு சென்று அங்குள்ள தலைமை லிகிதரிடம் கொடுத்தேன். அவர் அந்த விண்ணப்பப்பத்திரத்தைப் பார்ப்பதற்கு முன்பே, "வீடு கொள்வனவு செய்யும் கடன் உதவி நிறுத்தப்பட்டுள்ளது. இதை ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்று கூறினார். எனக்கு மிகவும் ஏமாற்றமாகப் போய்விட்டது.

உண்மையிலேயே குடியிருப்பதற்கு எனக்கோ எனது மனைவிக்கோ, வீடு வளவு இல்லை. மேற்படி கடன்மூலம் வீடு ஒன்று வாங்கி குடியிருப்பேன் என்ற ஆசையுடன்தான் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் எனது உடல் நலனையும் கவனியாது ஓடித்திரிந்து விண்ணப்பத்துக்கான சகல அத்தாட்சிப்பத்திரங்களையும் பெற்றேன். இந்நிலையில் இடியேற்ண்ட நாகம்போல் இருந்தது, அரசாங்கம் மேற்படி கடனை நிறுத்திவிட்டசெயல்.

என்போன்ற எத்தனையோ பேர் இதுசம்பந்தமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ தெரியாது.

கடன்நிறுத்தப்படுவதாயிருந்தால், அதற்குரிய விண்ணப்பப்பத்திரம் வழங்கியிருக்கத் தேவையில்லை. அத்துடன், எம்போன்றவர்கள் பத்திரிகை பார்ப்பதோ, அடிக்கடி வீடமைப்புத்திணைக்களத்துக்கு வந்து செல்வதோ இல்லை. இந்நிலையில் வீடு கொள்வனவு செய்யுங் கடன் நிறுத்தப்பட்டது மிகவும் கவலைக்குரிய செயலாகும்.

வீடற்ற எல்லோருக்கும் மாதிரிக் கிராமத்திலோ, தொகுதி அடிப்படையிலோ கட்டப்படும் வீடுகள் கிடைக்கப் போவதில்லை. மற்றும் காணி வாங்கி வீடு கட்டுவதற்குப்பெறும் கடனோ அதைவிடக் கஷ்டம். இன்றைய பொருள் விலையேற்றத்தில் கடன்பெற்று விடுகட்டுவதென்பது முடியாததாகும். ஏற்கனவே கடன்பெற்று கட்டப்படத் தொடங்கிய எத்தனையோ வீடுகள் அரைகுறையிலேயே பூர்த்தி செய்யப்படாமலிருக்கின்றன.

குடியிருப்பதற்காக வீடு கொள்வனவு செய்வதற்கு கடன்கோரி விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்த எங்களின் நிலைபற்றி தேசிய வீடமைப்புத்திணைக்கள அதிகாரிகள் நன்கு பரிசீலனை செய்து எமது விண்ணப்பத்தை ஏற்று கடன்நிவாரணம் வழங்குவார்களா என எதிர்பார்க்கிறேன்.

ஆ. கந்தசாமி
புங்குடுதீவு

#### கவுணாவத்தை ஆலய உயிர்ப்பலி விவகாரம்:

# இடைக்காலத்தடைஉத்தரவு வழங்குமாறு நீதிமன்றத்தில் மனு தாக்கல்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கவுணாவத்தை வைரவர் கோவிலில் வழமைபோல் இம்முறையும் உயிர்ப்பலி செய்வதை தடைசெய்யக்கூடாதுஎன்று இடைக்கால தடையுத்தரவு வழங்குமாறு கோரும் மனு ஒன்று மல்லாகம் நீதிமன்றத்தில் கோவில் முகாமையாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கோவில் முகாமையாளர் முருகர் செல்லக்குட்டி சார்பில் சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இம் மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

"மாவிட்டபுரம் கவுணாவத்தை வைரவர்கோவிலில் மனுதாரும், அவரைச் சார்ந்தவர்களும் வருடாவருடம் உயிர்ப்பலியை நடத்துவது வழக்கம். இம்முறையும் அந்த உயிர்ப்பலியை எதிர்வரும் 30ம் 31ம் திகதிகளில் நடத்த அவர்கள் ஆயத்தங்கள் செய்துள்ளனர். இந்த உயிர்ப்பலியை நடத்தாதுவிட்டால் மனுதாருக்கு பெரும் நஷ்டம் ஏற்படும். அத்துடன் வைரவர் பழிவாங்கும் தெய்வமானதால் உயிர்ப்பலியை நிறுத்துவதால் தமக்கு பாதிப்பு ஏற்படுமெனவும் மனுதார் பயப்படுகிறார்.

இந்த உயிர்ப்பலி குறித்து காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. மேவின் பெர்னாண்டோவிடம் மனுதார் தொடர்பு கொண்ட போது, அவர் இம்முறைஉயிர்ப்பலி செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனுதாரை பயமுறுத்தியுள்ளார். ஆகவே காங்கேசன்துறை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிக்கு இந்த உயிர்ப்பலியைத் தடைசெய்யக் கூடாது என்று இடைக்கால தடையுத்தரவு வழங்குமாறு கோருகிறோம்."

மனுதாக்கல் செய்யப்பட்டதையடுத்து மனுமீதான விசாரணையை நீதிபதி திரு சி. ஆர். இராசசிங்கம் ஒத்திவைத்தார். திரு. சி. சுந்தரலிங்கத்தின் ஆலோசனையின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட இம் மனுமீது மனுதார் சார்பில் வாதாட கொழும்பிலிருந்தும் சட்டத்தரணிகள் வரஇருக்கிறார்கள்.

## ஆலயத்துக்கு அமைச்சர் உதவி

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நிர்மாணிக்கப் பட்டுவரும் விநாயகர் ஆலயத்திற்கு இந்து கலாச்சார அமைச்சர் திரு.செ. இராசதுரை 17 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டுவரும் இவ்வாலய வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகின்றன. கட்டிட வேலைகள் முடிவுற்றதும் கும்பாபிஷேகத்தினை சிறப்பாக நடாத்த மேற்படி ஆலய தர்மகர்த்தாக்கள் சபையில் முடிவு செய்துள்ளனர்.

# விசேட பொலிஸ்சேவை வழங்கப்படமாட்டாது

## முகாமையாளர் கோரிக்கைநிராகரிப்பு

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் உயிர்களைப் பலியிடும் தினமாக முன்னர் குறிக்கப்பட்ட எதிர்வரும் 30ம், 31ம் திகதிகளில் அங்கு விசேட பொலிஸ்சேவை அளிக்கப்படமாட்டாதென காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் மறுத்துள்ளார்.

வழமையாக இத்தினங்களில் இக்கோவில் எல்லைக்குள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 20 பொலிசார்வரை சேவையிலீடுபடுத்தப்படுவதால் இம்முறையும் அச்சேவையை அளிக்குமாறு கோவில் முகாமையாளர் முருகர் செல்லக்குட்டி, காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் திரு. ஹுஷன் விஜயக்கோனிடம் விண்ணப்பித்திருந்தார்.

அந்த விண்ணப்பத்தை நிராகரித்த உதவி பொலிஸ் அதிபர் இம்முறை இந்த விசேட பொலிஸ் சேவை வழங்கப்படமாட்டாது என தெரிவித்துள்ளார்.

# "3 நிபந்தனைகளுடன்தமிழ்க்காங்கிரஸ் அடுத்த பொதுத்தேர்தலை பகிஷ்கரிக்கத் தயார்"

## வாலிபமுன்னணிச்செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"மூன்று நிபந்தனைகளுடன் அடுத்த பொதுத் தேர்தலை தமிழ்க்காங்கிரஸ் பகிஷ்கரிக்க தயாராக இருக்கிறது என்று தமிழ்க்காங்கிரஸ் செயலகத்தில் நடந்த கருத்தரங்கில், தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிச் செயலாளர் திரு. ரி மகேந்திரராசா கூறினார்.

சட்டத்தரணி திரு. ஜிம்மி ராஜரத்தினம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. மகேந்திரராசா மேலும் கூறியதாவது;-

"தமிழ்க்காங்கிரஸ், பாராளுமன்ற தேர்தலை பகிஷ்கரிக்க தயாரா என்று தமிழ் இளைஞர் பேரவையினர் கேட்டுள்ளனர். 3 நிபந்தனைகளுடன் தேர்தலைப் பகிஷ்கரிக்க தயார். இளைஞர் பேரவையினர் 3 நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டால், காங்கிரஸ் தலைமைப்பீடத்தை வலியுறுத்தி தேர்தலை பகிஷ்கரிக்கச் செய்வோம்.

முதலாவது நிபந்தனை- கூட்டணி எம். பிக்கள் அத்தனை பேரும், அடுத்த தேர்தல்வரை பொறுத்திராது உடனடியாக பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவேண்டும். கூட்டணியில் அங்கம் வகிக்கும் இளைஞர் பேரவை இதனை வலியுறுத்தல் செய்யவேண்டும்.

இரண்டாவது நிபந்தனை- தேர்தலில் கூறியதுபோல், தமிழ் தேசிய மன்றத்தை அமைத்து, சுதந்திர தமிழ் ஈழத்தை கூட்டணியினர் பிரகடனம் செய்யவேண்டும்.

மூன்றாவது நிபந்தனை- 83ம் ஆண்டு தேர்தலில் கூட்டணியினர் போட்டியிடக் கூடாது. இந்த 3 நிபந்தனைகளையும், ஏற்கச் செய்தால், தமிழ்க்காங்கிரஸ், தேர்தலை பகிஷ்கரிக்க தயார். காங்கிரஸ் தலைமைப் பீடத்தை வலியுறுத்துவோம்.

"கடந்த 3 வருட காலம் கூட்டணியுடன் ஒட்டியிருந்த இளைஞர் பேரவை இன்று தலைவர்களைத் தட்டிக் கேட்கிறது. தலைவர்கள், தமிழினத்திற்குச் செய்த துரோகத்திற்கு இளைஞர் பேரவைக்கும் பங்குண்டு.

அரசிடம் பெற்ற சலுகைகள், பட்டம் பதவிகளில், இளைஞர் பேரவையும் பங்கு பெற்றார்கள். இளைஞர் பேரவையினர், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாகவும், வங்கியிலும், இ. போ. ச. விலும், கல்வி இலாகாவிலும் பதவி பெற்றனர். சமாதான நீதிபதி பட்டமும் பெற்றனர். 3 வருட காலம் இவற்றை அனுபவித்த பின் இன்று தலைவர்களைத் தட்டிக் கேட்கிறார்கள். (ச)

#### யாழ். செயலக கலாமன்ற

# வள்ளுவர் விழாப் போட்டியில் வெற்றிபெறும் மாணவர்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக கலாச்சார மன்றம் இம்மாதம் 24ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவிருக்கும் வள்ளுவர் விழாவையொட்டி யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய வள்ளுவர் விழாப் போட்டிகளின் முடிவு வருமாறு- இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு வள்ளுவர் விழாவன்று திருமதி யோகேந்திரா துரைசுவாமி பரிசில்கள் வழங்குவார்.

திருக்குறள் பேச்சுப் போட்டி (மேற்பிரிவு): முதலாம் இடம்: பூங்கொடி இராசரத்தினம், நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை, இரண்டாம் இடம்: சுலோசனா சண்முகநாதன், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம், மூன்றும் இடம்: த. உருத்திரகுமார், யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

திருக்குறள் பேச்சுப்போட்டி (கீழ்ப்பிரிவு): முதலாம் இடம்: அருள் கிறிஸ்ரிலா அலெக்சாண்டர், இளவாலை கொன்வென்ட், இளவாலை, இரண்டாம் இடம்: சிற்சபேசன் சிவசுப்பிரமணியம், யாழ். இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம், மூன்றும் இடம்: மலர்விழி அருள்லிங்கம், யாழ் இந்துமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.

திருக்குறள் கட்டுரைப் போட்டி (மேற்பிரிவு): முதலாம் இடம்: வேணுராதா கார்மேகசுந்தரம், மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பருத்தித்துறை, இரண்டாம் இடம்: மாலினி சோமசுந்தரம், யாழ் இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம், மூன்றும் இடம்: நளினு விசுவலிங்கம், மெதடிஸ்த மகளிர்கல்லூரி, பருத்தித்துறை

திருக்குறள் கட்டுரைப் போட்டி கீழ்ப் பிரிவு முதலாம் இடம்: நளாயினி ஸ்ரீனிவாசன், வேம்படிமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம், இரண்டாம் இடம்: கலாமதி இராசரையகம், நயினுதீவு மகாவித்தியாலயம், நயினுதீவு, மூன்றும் இடம்: சுசிலாதேவி கந்தையா அருணோதயாக்கல்லூரி அளவெட்டி.

திருக்குறள் மனனப்போட்டி (மேற்பிரிவு) முதலாம் இடம்: நகுலேஸ்வரி வன்னியசிங்கம், ஞானசாரியர் கல்லூரி உடுப்பிட்டி, இரண்டாம் இடம்: செல்வரதி செல்வவிநாயகம், மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பருத்தித்துறை, மூன்றும் இடம்: சுபத்திரா சுந்தரலிங்கம், மானிப்பாய் மகளிர்கல்லூரி, மானிப்பாய்.

திருக்குறள் மனனப்போட்டி (கீழ்ப்பிரிவு) முதலாம் இடம்: தருமராசா குகராசா ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை, இரண்டாம் இடம்: நவநீத ஐயர் ரஞ்சினி, உடுவில் முருகமூர்த்தி மகாவித்தியாலயம், உடுவில், மூன்றும் இடம்: இ கலாவதி, நல்லூர் விநானசி சி. த. க. பாடசாலை, கீதாஞ்சலி நடேசன், மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பருத்தித்துறை, ஏ. ரகுராமன் குமார் ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை.

#### நம்பிக்கைவீண்போகும் விதத்தில்

# 3 ஆண்டுகளை கூட்டணி செலவழித்து விட்டதாம்

## ஈழவேந்தன் மீண்டும் குற்றச்சாட்டு

(மாவிட்டபுரம்)

"கூட்டணியினருக்கு வாக்களித்தால் தமிழ் ஈழத்தை நிறுவ அவர்கள் முயற்சிப்பார்கள், அதன் மூலம் நாம் உரிமை பெற்ற மக்களாக வாழலாம் என மக்கள் நம்பியே கூட்டணியினருக்கு வாக்களித்தனர். ஆனால் அந்த நம்பிக்கை வீண் போகும் விதத்தில் கூட்டணியினர் கடந்த 3 ஆண்டுகளை செலவளித்து விட்டனர்.

இவ்வாறு தெல்லிப்பழை சத்திக் கருகாமையில் திரு. வை சந்திரபாலன் தலைமையில் நடந்த இளைஞர் பேரவை கருத்தரங்கொன்றில் கலந்துரையாற்றிய திரு. ஈழவேந்தன் கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் தமிழ் ஈழம் நிறுவுவதே எமது ஒரே நோக்கம் என 77-ல் நாம் தீர்மானித்து விட்டோம். அது ஓர் விலங்கமான காரியம் என்பதையும் உணர்ந்துள்ளோம். ஆனால் அதற்காக அதனை விடுத்து அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடி அவர்களிடம் ஒரு சில சலுகைகளைப் பெறும் நிலையில் நாம் இருக்கக்கூடாது. வழக்கமாக ஐ தே க ஆட்சிக்கு வரும் போது மக்களை பொறுமையாக இருக்குமாறு எமது தலைவர்கள் சொல்லுவது வழக்கமாகிவிட்டது. ஸ்ரீலங்கா அரசு காலத்தில் பல போராட்டங்களை நடத்தியவர்கள் இன்று புகழ்மாலைகள் சூட்டுவதில் ஈடுபடுகிறார்கள் மந்திரிமார் வடபகுதிக்கு வரும் போது அவர்களை வரவேற்கிறார்கள் பாராட்டிப் பேசுகிறார்கள் விருந்து வைக்கின்றார்கள் மக்கள் இதற்காகவா இவர்களைத் தெரிவு செய்து அனுப்பினார்கள்.

பாராளுமன்றத்திலிருந்து பல விடயங்களை இதுவரை சாதித்தது உண்மைதான் ஆனால் இனியும் பாராளுமன்றத்தில் இருப்பதோ 83-ல் மீண்டும் தேர்தலில் நிற்பதோ முட்டாள் தனமானது, 77 தேர்தலே இறுதி தேர்தல் என்று கூறிவிட்டவர்கள் இனி எப்படி வாக்குக்காக மக்கள் முன் போகமுடியும்?

மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மூலம் எமக்கு ஏதோ நிறையக் கிடைக்கப்போவதாக தலைவர்கள் எம்மை நம்பச் செய்கிறார்கள் ஆனால் அதன் மூலம் எமது பிரதேசத்தை பாதுகாப்பதற்குக்கூட வழியில்லை என்றார்.

இரா வாசுதேவா பேசும் போது கூறியதாவது: அரசாங்கம் தமிழ்மக்களை பல்வேறு துறைகளிலும் நசுக்கி வருகிறது தமிழ் விவசாயிகளது மிளகாய் வெங்காயம் போன்ற உப உணவுப் பொருட்களை சந்தைப்படுத்தும் நேரங்களில்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி

(நெல்லியடி)
வடமாநில கல்வித் திணைக்களம் சுகாதாரப் 'உடற் பயிற்சி போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சியொன்றை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இப் பயிற்சி வகுப்பிற்கு ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலிருந்தும் தலா ஐந்து ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பயிற்சி ஆரம்பமாவது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று கல்வித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# துன்னாலைப்பகுதியில் அமைதி நிலவுகிறது

(நெல்லியடி)
பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியின் துன்னாலைப்பகுதியில், இரு சமூகங்களிடையே ஏற்பட்டிருந்த கோஷ்டி மோதல் தணிந்து, இப்பகுதியில் பூரண அமைதி நிலவுகின்றது.

பழைய பகைமை காரணமாக ஏற்பட்ட இக்கோஷ்டி மோதலில் பலர் காயமடைந்தனர். அபாயகரமான நிலையிலிருந்த கந்தசாமி என்பவர் யாழ் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு த. இராசலிங்கம், இருதரப்பினரையும் சமாதானப்படுத்தி வைத்துள்ளார். கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இவரது தலைமையில் நடைபெற்ற சமாதான மாநாட்டில் இருதரப்பினரும் சமாதானமும் ஒழுங்கும் அமைதியும் நிலவ ஒத்துழைப்பு வழங்க சம்மதித்திருந்தார்கள். இம் மாநாட்டில் பருத்தித்துறை போலிஸ் அதிபர் திரு சந்திரா குணரத்தின, உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்துவும் கலந்துகொண்டனர்.

# நீதிமன்றத்தை அவமதித்தார் இருவார சிறைத்தண்டனை!

(யாழ்ப்பாணம்)
நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவருக்கு 2 வார கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ் குடும்ப நீதிமன்றத்தில் நீதிபதி எம். டி. ஜெயரத்தினம் முன்னிலையில் தாபரிப்பு வழக்கு ஒன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் எதிர் மனுதாரரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல் ரஸீமன் புகாரி என்பவர் "கூட்டுக்குப்போக தயார் ஆனால் காசுகட்டமாட்டேன் வேணுமென்றால் உள்ளுக்கு அனுப்பும்" என்றார்.

இதனால் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் 2 வாரம் நியாண்டில் வைக்கப்பட்டார்.

மீண்டும் கோர்ட்டில் ஆஜர் செய்தபோது தமக்காகத் தாமே வாதாடினார்.

சுகவீனம் காரணமாக அப்படி கூறிவிட்டதாகவும் மன்னிக்கும்படியும் கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து நீதிபதி 2 வாரம் சிறைத்தண்டனை விதித்தார். [ச.கு]

# இ. வானொலி கலைஞர்கள் சங்கம்

(யாழ்ப்பாணம்)
இலங்கை வானொலி கர்நாடக இசைக் கலைஞர்கள் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. இதற்கான கூட்டமொன்று நாளை வியாழக்கிழமை காலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் இலங்கை வானொலி கர்நாடக இசை சம்பந்தமான கலைஞர்கள் பற்றிய பிரச்சினைகள் ஆராயப்படுமெனத் தெரிகிறது. (*)

# பாடசாலைக் கட்டடங்கள்

(நெல்லியடி)
கோப்பாய் கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலைகளில், சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் கட்டிடங்கள் அமைக்கப்படவுள்ளன.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில், சுமார் 30 ஆயிரம் ரூபா மின் இணைப்பு வேலைகளும் நடைபெறவுள்ளன.

மேற்படி வேலைகளுக்கான நிதி, பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, கோப்பாய் எம். பி. திரு சி. கதிரவேலுப்பிள்ளையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# சில்லறைக்குத் தட்டுப்பாடு

(மன்னார்)
தலைமன்னார், பேசாலை, ரயில் நிலையங்களில் சில்லறைக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த ரயில் நிலையங்களில் பிரயாணச் சீட்டுப் பெறும் பிரயாணிகள் சில்லறைக் காசைக் கொடுத்து பிரயாணச் சீட்டைப்பெற வேண்டும். (ச)

# நியமனம்

மன்னார் மாவட்ட ஐ. தே. கட்சியின் இணைப்புக் குழுவின் செயலாளரான ஜனாப். கே. எம். ஏ. அக்பர், மூதூர் எம். பி. யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப்பின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஆண்டுவிழாப் போட்டிகள்

(மாவிட்டபுரம்)
காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம், ஆண்டு நிறைவுபோட்டி வருடந்தோறும் நடத்தும் நாடகம், பேச்சு, மெல்பந்து, கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை ஜூன் மாத முற்பகுதியில் நடத்திமுடிக்கத் தீர்மானித்துள்ளது. (க)

# விவேகாநந்தர் விழா: சிறப்பாக நடத்த ஏற்பாடு

(வண்ணார்பண்ணை)
சுவாமிவிவேகானந்தர் விழா அடுத்த மாதம் 20ம், 21ம், 22ம், திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற விருக்கிறது. இவ் விழாவை பரந்த அடிப்படையில் சிறப்பாக கொண்டாடுவதற்கு விவேகானந்தர் விழாக்குழுவினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையிலான இவ் விழாக்குழுவில், நீதிபதிகளும் கல்விப் பிரமுகர்களும், உதவி அரசாங்க அதிபர்களும் அடங்கியிருக்கின்றனர்.

இவ் விழா ஏற்பாடுகள் சம்பந்தமாக திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் கடந்த திங்கட்கிழமை யாழ் மாவட்ட அமைச்சு மண்டபத்தில் கூடிய இவ் விழாக்குழு இவ் விழாவின் மூன்று நாள் நிகழ்ச்சிகள் பற்றியும் ஆராய்ந்தது. மூன்று தினங்களில் மூன்று இடங்களில் மூன்று பிரிவுகளாக இவ் விழாவை நடத்துவதெனவும் இந்தியாவிலிருந்து கலைஞர்களையும் பிரமுகர்களையும், சொற் பொழிவாளர்களையும் இம் மகாநாட்டிற்கு அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க

# தீப்பெட்டித் தொழிற்சாலை அடுத்தமாதம் மூடப்படுகிறது!

## 200 ஊழியர்கள் வேலைநீக்கம்

(பண்டத்தரிப்பு)
வடபகுதியிலுள்ள ஒரே ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையான பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்க தீப்பெட்டித்தொழிற்சாலையை ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் முற்றாக மூடிவிடுவதென்று மேற்படி சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ். கந்தையா, தலைமையில் நடைபெற்ற இயக்குநர் சபைக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும், இச்சங்க இயக்குநர் சபை நியமன உறுப்பினருமான திரு. என். பி. ஜெகநாதனும் கலந்துகொண்டார்.

தீப்பெட்டித் தொழிற்சாலையின் எதிர்காலம்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென்று அண்மையில் நியமிக்கப்பட்ட விசேட உப குழுவின் சிபார்சு இணங்கவே இயக்குநர்சபை இந்தத் தொழிற்சாலையை அடுத்த மாதம் முதலாம் திகதியுடன் முற்றாக மூடி விடுவதென தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் 1975-ம் ஆண்டு தொடக்கம் சங்கத்தில் நியமிக்கப்பட்ட தற்காலிக பணியாளர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வேலைநீக்கம் செய்வதென்றும் இந்த இயக்குநர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானங்கள் பற்றி சங்கத் தலைவரும், பழம்பெரும் கூட்டுறவாளருமான திரு. எஸ். கந்தையா "ஈழநாடு" நிருபருக்கு விளக்கிக் கூறுகையில் சங்கத்தின் நிதி நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதென்றும் தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பமான காலம் தொடக்கம் சங்கத்திற்கு சுமார் எட்டு லட்ச ரூபா நஷ்டம் ஏற்பட்டு வருகின்றதென்றும் இதனாலேயே இத்தீப்பெட்டித் தொழிற்சாலையை மூடவேண்டிய நிலைக்கு சங்கம் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

சங்கத்தின் தற்காலிக பணியாளர்களின் வேலை நீக்கத் தீர்மானம்பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில் சங்க வருமானத்திலும் பார்க்க சம்பளமாக மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவரை செலவாகின்றது. இந்தத் தற்காலிக ஊழியர்கள் ஒழுங்கான முறையில் வேலைக்கு எடுக்கப்படவில்லை. கடந்த காலங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இச்சங்கத்தில் நியமனம் பெற்றுள்ளார்கள் என்றும் இவர்களுக்குத் தொடர்ந்தும் சம்பளம் வழங்கிக் கொண்டிருக்க சங்க நிதி நிலைமை இடமளிக்காது என்றும் இவர்களின் ஏற்றல் மாதந்திருக்கிய சம்பளத்தை வழங்கவே சங்கத்திடம் பணம் பற்றாக்குறையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இச்சங்கத்தில் சுமார் 200க்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெபவிழா

(அரியாலை)
கன்னாகம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில். பெந்தெகொஸ்தே ஜெபவிழா நாளை வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை நடைபெறவிருக்கிறது.

மதுரை இறையியல் கல்லூரிப் பேராசிரியர் அருட்திரு தோமஸ் தங்கராச அடிகளார் இவ்விழாவில் அருளுரை நிகழ்த்துவார்.

# பயிற்சியும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)
சாதி அமைப்பு முறைக்கு எதிரான அணுகு முறைப் பயிற்சியும் கருத்தரங்கும் யாழ் கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கிலும், பயிற்சியிலும் மேற்படி மகா வித்தியாலயத்தை சேர்ந்த உயர் வகுப்பு மாணவிகள் பங்கு பற்றினர்.

அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்ட மேற்படி பயிற்சியின் போது அமெரிக்கா வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் பங்கு கொண்டு விரிவுரைகளும் பயிற்சிகளும் அளித்தனர்.

தமிழ் மக்கள் மத்தியிலே நிலவுகின்ற சாதியமைப்பு முறையினை எவ்வாறு தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை பாத்திரப் படைப்பு, துரித சித்தனை போன்ற நாடகங்கள் மூலம் மாணவிகள் நடித்துக் காட்டினர்.

# முத்தமிழ் மன்ற 2ம் மாத விழா

(யாழ்ப்பாணம்)
சங்கானை முத்தமிழ் மன்றம் நடாத்தும் 2வது மாத விழா, இம் மாதம் 31ம் திகதி சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் மன்றத்தலைவர் திரு சிவ செட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

"சமுதாய சீர்திருத்தம் சட்டத்தினாலா? சமயத்தினாலா?" என்ற தலைப்பிலான பட்டிமன்றமும், "தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற தலைப்பிலான கவிதைப் போட்டியும் நடைபெறுகின்றன.

இலவசம் FREE இலவசம்

திறமான ஸ்ரேடியம் தலைக்கவசம்
(Stadium Helmet)

1980-ம் ஆண்டு மே மாதம் 25-ந் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 25 ந் திகதி வரைக்குள் புத்தம் புதிய ஹொண்டா மோட்டார் சைக்கிள்களுக்காக யாழ்ப்பாணம் கன்ரேபியா மோட்டர்ஸ் உடன் ஓடர் பதிவு செய்பவர்களுக்கு இலவசமாகத் திறமான ஸ்ரேடியம் தலைக்கவசம் (STADIUM HELMET) ஒன்றும் சைக்கிளுடன் கொடுக்கப்படும்.

எங்களுடன் பின்வரும் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களுக்காக ஓடர் பதிவு செய்து கொள்ளலாம்.

1980 — 81 மாதிரி

| | | | |
|---|---|---|---|
| ஹொண்டா | C 70 | — | Rs. 9,250-00 |
| ,, | C. D. 70 | — | Rs. 10,300-00 |
| ,, | C. 90 | — | Rs. 11,250-00 |
| ,, | BENLY SUPER | — | Rs 12,500 00 |
| ,, | C. G. 125 | — | Rs. 14,300-00 |
| ,, | C. B. 125N | — | Rs. 16,500-00 |
| ,, | C. B. 125T | — | Rs 18,500 00 |
| ,, | C. B. 250N | — | Rs 26,500 00 |
| ,, | C D. 200NR | — | Rs 19,000 00 |

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள். விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

கன்ரேபியா மோட்டர்ஸ்

21, பிரதான வீதி. (தொலைபேசி: எண். 8201) யாழ்ப்பாணம்.
Authorised Dealers of Stafford Motor Co. Ltd. Colombo—10.
5828

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "இ. காங். - தி. மு. க. ஆட்சிக்கு வந்தால்

# தமிழுக்கு தனியான பல்கலைக்கழகம்

## தாலித்தங்கத்துக்கு அரசு மான்யம்; ஏழைகளின் அடகுநகைகளைமீட்கவும்உதவி"

### வானொலியில் கலைஞர் கருணாநிதி



"தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைத்தால்; தமிழ்நாட்டில் தமிழுக்கெனத் தனியான ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும்" என்று தி. மு. க. தலைவர் டாக்டர் மு. கருணாநிதி தமிழகத் தேர்தல் சம்பந்தமாக வானொலியில் நிகழ்த்திய உரையில் உறுதி தெரிவித்தார்.

திரு மு. கருணாநிதி தொடர்ந்து உரையாற்றுகையில்; தங்கத்தின் விலை உயர்வைக் கருதி ஏழை எளியவர்களின் வீட்டுப் பெண்களின் திருமணத்திற்கு தாலிக்குத் தங்கம் மானியமாக வழங்கப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

கலைஞர் கருணாநிதி மேலும் கூறியதாவது: கடந்த இரண்டரை ஆண்டுகாலம் தமிழகத்தில் இருண்ட ஆட்சி நடைபெற்றது அதனால் தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் சிறந்த ஆட்சி அமையவேண்டுமென விரும்பினோம். அதனால் தான் தி. மு க.— இந்திரா கூட்டு ஏற்பட்டது. அதன் பயன் எம். ஜி. ஆர். ஆட்சி அகற்றப்பட்டது)

### திண்டுக்கல் தேர்தலில்

1972ம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்ட தி. மு. க. தோல்வியடைந்தது. தோற்றது ஒரு தொகுதியில்தானே என்றுகூட எண்ணிவிடாது, இனிமே கருணாநிதி ஒருநிமிடம் கூட ஆட்சியில் இருக்கக்கூடாது என்றும், உடனே மத்திய அரசு தலையிட்டு தி. மு. க. ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்றும் கூறிய எம். ஜி. ஆர். இன்று தமது ஆட்சி கலைக்கப்பட்டதும் கூப்பாடுபோடுகிறார்; தர்மஉபதேசம் செய்கிறார்!

### ஜனதா ஆட்சியில்

ஜனதாவின் இரண்டரை ஆண்டுகாலத்தில் ஆட்சியா நடைபெற்றது! கோரிக்கைகள் எழுப்புவது கடுமையான குற்றம் எனக் கருதப்பட்டது. நாளுக்கு ஒரு திட்டம்; வேளைக்கு ஒரு சட்டம் - தீர்ந்துபோனகாகிதப்பட்டம்! எதுவுமே நடைபெறவில்லை. நிர்வாகம் குறட்டைவிட்டுத் தூங்கியது. இரண்டரை ஆண்டுகளில் சட்டமன்றத்தில் ஒதுக்கப்பட்ட 200 கோடி ரூபா செலவிடப்படவில்லை என்பது ஒன்றே அன்றைய ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டை அழுத்தம் திருத்தமாக எடுத்துக்காட்டுகிறது!

78, 79ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட 25 கோடி ரூபா செலவிடப்படவில்லை. தனியார் துறையிலும் மத்திய அரசின் மூலம் பெரும் தொழில்கள் பல தமிழகத்திற்கு வர இருந்தன. அ. தி. மு. க. ஆட்சி பலன்தராததால் வேறு மாநிலங்களுக்கு போய்விட்டன. செய்யவேண்டியவைகளைச் செய்யவுமில்லை. செய்யக்கூடாதவைகளைச் செய்யாமல் இருந்ததுமில்லை.

### விவசாயிகள் பாதிப்பு

தமிழ் நாட்டின் முதுகெலும்பு விவசாயி. அவனுடைய முதுகெலும்பை எம். ஜி. ஆர். ஆட்சி முறித்தெறிந்தது. விளைவித்த பொருள்களுக்கு கட்டுப்படியான விலைவேண்டுமென்று கேட்டான். கோடிக்கணக்கில் விவசாயிகளுக்குச் சலுகைகள் என்று விளம்பரப்படுத்தப் பட்டனவே தவிர, அவர்களுக்கு உருப்படியான எதுவுமே செய்யப்படவில்லை! விவசாயிகளை அழைத்து ஒரு நிமிடம்கூட அவர்களுடன் பேச ஆட்சியினர் மறுத்துவிட்டனர்!

### தாய்க்குலம்

''தாய்க்குலத்தைப் பற்றிப் பேசும் ஆட்சியிலேதான் வாகைகுளத்தில பாக்கியத்தம்மாள், முத்துவேல் அம்மாள் ஆகியோர் பதைக்கப் பதைக்கச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

''கடும்புலி வாழும் காட்டாற்று ஆட்சியில் தங்களுக்கு வேண்டாதவர்கள் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டன. நீதிமன்றத்திற்கு அளித்த தஸ்தாவேஜுகளிலே கூட திருத்தம் செய்து மோசடிசெய்தனர். அதிலே திதிபதிகளே கண்டிக்காட்டினர். வாடகைகளில் கூட ஊழல்கள் காணப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியில், சட்டப்பேரவையில், ஆதாரபூர்வமாக தி.மு.க. சார்பில் நானே எடுத்துக்காட்டிய குற்றச் சாட்டுகளுக்கு ஏற்றபதில் அளிக்கப்படவில்லை. நீதி விசாரணை நடத்துவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் நீர் மேல் எழுத்தாகப் போய்விட்டது!

### தமிழகம் பொலிவுற ..

''கடந்த இரண்டரை ஆண்டுகளாக தமிழகம் பாழடைந்த மண்டபமாக, பரிதாபத்திற்குரிய பாவையாக காட்சியளித்தது. அழகிழந்து காட்சி அளிக்கும் மண்டபம் எழிற்கோலம்பூண, பரிதாபத்திற்குரிய தமிழ்ப்பாவை புதுப் பொலிவு பெற, அந்நிலை நல்விலையெய்திடத்தான் தி.மு க.- இந்திராகாங்கிரஸுடனும் மற்றும் தோழமைக் கட்சிகளுடனும்உடன்பாடு கொண்டு இந்தத் தேர்தல் களத்தில் குதித்துள்ளது.

''தி.மு க. வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் விவசாயிகளின் பிரச்சினைகளை குறிப்பாக கடன் தொல்லைகளை விரைவாகத்தீர்க்க வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. மாநில அளவில் விவசாயிகள் மேம்பாட்டு வாரியம் அமைக்கப்படும். முதல் கட்டமாகப் ஜப்தி, ஜலம்போன்ற கடும் முறைகள் விலக்கப்படும். விவசாயிகளின் வீட்டுப்பெண்கள் அடகு வைத்துள்ள நகைகள் எல்லாம் ஏலம் போகாமல் பாதுகாக்கப்பட்டு மீட்கப்பட வழிவகைகள் வகுக்கப்படும். உற்பத்திப் பொருட்களுக்கு கட்டுப்படியான விலை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலையில் கிடைக்க வழிவகுக்கப்படும். தங்கவிலை உயர்வை எண்ணி ஏழை எளியவர்கள் வீட்டுப் பெண்களின் திருமணத்திற்கு தாலித்தங்கத்துக்கென குறிப்பிட்ட அளவு அரசாங்கம் மானியம் வழங்கும்.

### சிறப்பு மாணவர்கள்

''வசதியற்ற பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிப்பில் சிறந்துவிளங்கினால் அவர்களைச் சிறப்பு மாணவர்கள் என்ற பெயரால் அரசாங்கமே தத்தெடுத்து உயர்கல்வி வழங்கி, உத்தியோகங்களும் வழங்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும்.

''கிராமத்துறை வளர்ச்சியிலும் அரசு அதிக அக்கறை காட்டும். மின்சாரத்துறை சீரமைப்பு, மின் உற்பத்தி ஆகியவற்றுக்கென நிபுணர்குழு அமைக்கப்படும். தொழில்களை ஏராளமாகத் தொடங்கி தமிழகம் தொழில் மயமாக எல்லா வசதிகளும் செய்துதரப்படும். சகலரது பிரச்சினைகளும் சுமுகமாகத் தீர்த்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### குமரிமுனையில் வள்ளுவர்சிலை

''சமுதாய நலக்கூடம் வைக்க, சிறு தொழில் நடாத்த உதவி வழங்கப்படும். குடிநீர்வசதி, மருத்துவ வசதி ஆகியன வழங்கதிட்டங்கள் வகுக்கப்படும். தமிழக அரசு அறிவித்தது போன்று குமரி முனையில் திருவள்ளுவர்சிலை மிகப்பெரிய அளவில் அமைக்கப்படும்.

### தமிழுக்கு பல்கலைக்கழகம்

தமிழுக்குத் தனிப்பல்கலைக்கழகம் அமைக்கப்படும். சீர்கேட்டால் சீர்திருத்தப்படும். கலைக்கப்பட்ட 12 ஆயிரம் ஊராட்சி மன்றங்களின் தேர்தலும், மாநகராட்சி, நகராட்சி மன்றங்களும் மக்களின் பிரதிநிதிகளைப் பெற்று நகரங்களும், கிராமங்களும் தேவையான வசதிகளைப்பெற மிகவிரைவில் தேர்தல் நடாத்தப்படும்'' என்று கலைஞர் கருணாநிதி கூறினார். (கொ)

### சட்டசபைத் தேர்தல்

#### ஏற்பாடுகள் பூர்த்தி

(புதுடில்லி)

இம்மாத இறுதியில் நடைபெறும் 9 மாநில சட்டசபைத் தேர்தல்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.


## சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் றோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி"

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் றோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

றோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவும் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் .................................... சிறந்த சாரதி பெயர் ....................................

டிப்போ :- யாழ்ப்பாணம்–காரைநகர்–பருத்தித்துறை–கிளிநொச்சி–முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா

(தங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்.................................ஒப்பம்...............

விலாசம்......................................................


### பயிர்க் காப்புறுதிப் பிரசாரம்

(புலோலி)

யாழ் மாவட்டத்தில், விவசாயிகள் பயிர்காப்புறுதி செய்ய வேண்டிய முக்கியத்துவத்தையும் அதன் நன்மைகளையும் பயிர்க்காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்கள் விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்கு விளக்கி வருகின்றனர்.

இந்த ஆண்டு சிறுபோகத்தில் கிளிநொச்சியிலிருந்து 1,78,000 ரூபாவைப் பயிர் காப்புறுதியாகப் பயிர்க்காப்புறுதிச் சபை விவசாயிகளிடமிருந்து [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது.


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

## குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்



- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் 'மைட்'களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 11/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வூட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941–5

METROPOLITAN


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெருசலத்தில் தூதரகம் திறக்கும் நாடுகளுடன்

# ராஜதந்திர உறவுகளைத் துண்டிக்க இஸ்லாமிய நாடுகள் தீர்மானம்

இஸ்லாமாபாத், மே 20 ஜெருசலத்தில் உலகநாடுகளின் தூதரகங்கள் திறக்கப்படுவதற்கு இஸ்லாமிய நாடுகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்லாமிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் மகாநாடு இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நேற்று நடைபெற்ற மகாநாட்டில்; ஜெருசலத்தில் உலக நாடுகளின் தூதரகங்கள் திறக்கப்படும் விஷயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

ஜெருசலத்தில் எந்த ஒரு நாடும் தூதரகம் திறந்தால், அந்த நாட்டுடன் ராஜதந்திர தொடர்புகளை உடனடியாகத் துண்டித்துக்கொள்வது என்று இஸ்லாமியநாடுகள் இணக்கங் கண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஜப்பானிய தேர்தல்

டோக்கியோ, மே 20 ஜப்பானிய பாராளுமன்றம் நேற்று கலைக்கப்பட்டது. ஜூன் மாதம் 22ல் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

—

## ராஜினாமா!

புதுடில்லி, மே 20 திரு. பகுகுணா, இந்திரா காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்ததன் எதிரொலியாக, வேறு சில எம். பிக்களும் இந்திரா காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்துள்ளனர்.

மியாமி நகரில்

# இனக்கலவரம் நீடிக்கிறது!

வாஷிங்டன், மே 20 மியாமி நகரில் நீடித்து வரும் இனக்கலவரங்களைத் தொடர்ந்து ஐநூறுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மியாமி நகரில், கறுப்பு இனத்தவர் ஒருவர் நான்கு வெள்ளையரினால் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து இங்கு கடந்த சனிக்கிழமை கறுப்பு இனத்தவர்களுக்கு மிடையே கலவரம் ஆரம்பித்தது. கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன; கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இதன் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மியாமி நகரில் இரவுநேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டபோதிலும் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# பணயக்கைதிகள் விவகாரம்: இம்மாதத்தில் தீர்வு?

தெஹ்ரான், மே 20 அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரத்துக்கு இம் மாதம் முற்றுப்புள்ளி வைக்கப்படுமா?

இங்குள்ள பல வட்டாரங்களிலிருந்தும் வெளிவரும் செய்திகள் மேற்கண்ட தகவல்களை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

ஈரானின் முதலாவது இஸ்லாமிய நாடாளுமன்றம், இம் மாதம் 28ல் கூடும்போது, பாராளுமன்றத்தை எதிர்நோக்கும் முதலாவது பிரச்னையாக பணயவிவகாரம்இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானிய மதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னியும், பணயக்கைதிகள் விவகாரத்தை ஈரானிய பாராளுமன்றமே தீர்த்துவைக்கும்என்று உறுதியாகக் கூறியிருப்பதுஇங்குகுறிப் பிடத்தக்கது.

பணயக்கைதிகள் விவகாரமாக ஏற்கனவே ஒரு முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இதனை அமுல்நடத்தவேண்டிய பொறுப்பு, ஈரானிய பாராளுமன்றத்திடம் இருக்கிறது என்றும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், இரண்டு கட்டங்களாக பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாஸ்கோ ஒலிம்பிக்கில்

## பங்குபற்றுவதென்று ஐரோப்பிய நாடுகள் முடிவு

லண்டன், மே 20 மாஸ்கோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வது என்று ஐரோப்பிய நாடுகள் பல முடிவுசெய்துள்ளன.

மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டும் இந்த நாடுகள் அதனைப் புறக்கணித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஒலிம்பிக் போட்டிகளை பகிஷ்கரிக்குமாறு இத்தாலி அரசு கோரிக்கை விடுத்திருந்தும் இத்தாலி ஒலிம்பிக்குழு போட்டியில் கலந்துகொள்வது என்று தீர்மானித்துள்ளது.

மாஸ்கோ போட்டிகளில் கலந்துகொள்வதென்று தீர்மானித்துள்ள ஐரோப்பிய நாடுகளில் இத்தாலி, சுவீடன், ஆஸ்திரியா, அயர்லாந்து, ஹொலந்து, பெல்ஜியம் ஆகியவையும் அடங்கும்.

## அமெரிக்க உடன்படிக்கை: ஓமான் ரத்துச்செய்தது

வாஷிங்டன், மே 20 ஏப்ரல் மாத இறுதியில் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா கமாண்டோ துருப்புக்களை அனுப்பியதன் எதிரொலியாக அமெரிக்காவுடன் ஓமான் செய்திருந்த ரகசிய உடன்படிக்கையை, ஓமான் சுல்தான் கபுஸ் ரத்துசெய்துவிட்டார்.

இந்தத் தகவலை அமெரிக்க பத்திரிகையான "பொஸ்டன் குலோப்" ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

ஓமான்—அமெரிக்க ரகசிய உடன்படிக்கையின் கீழ் மஷிரா தீவிலும், அரபுக்கடலிலுள்ள முத்ரா துறைமுகத்திலும் உள்ள இராணுவத்தளங்களை பாவிக்க அமெரிக்க கடற்படையும், விமானப்படையும் அனுமதிக்கப்பட்டிருந்தன. ஈரானுக்கு துருப்புக்களை எடுத்துச்சென்ற அமெரிக்க விமானங்கள் ஆறு, மஷிராவில் எண்ணெய் நிரப்ப இறங்கின என்றும் இது ஓமானின் அனுமதியின்றி செய்யப்பட்டது என்றும் இது உடன்படிக்கைக்கு முரணானது என்றும் ஓமான் கருதியது.

மஷிராவில் இறங்கிய அமெரிக்க விமானங்கள் ஜப்பானின் ஒகினாவிலுள்ள கடினா ராணுவத் தளத்திலிருந்தே புறப்பட்டன: அமெரிக்க ஜப்பானிய "பந்தோபஸ்து உடன்படிக்கையின்" கீழ் ஜப்பானிலுள்ள அமெரிக்கத் துருப்புகளின் ராணுவ நடவடிக்கை பற்றி, ஜப்பானுடன் கலந்தாலோசித்தே முடிவெடுக்க வேண்டும். ஆனால் பிரதமர் ஒஹிரா தன்னை அமெரிக்க நிர்வாகம் கலந்தாலோசிக்கவில்லை என்று அறிவித்துள்ளார். இந்தப் பின்னணியில் மேற்படி உடன்படிக்கைக்கு சில அமெரிக்க ஜப்பானிய வட்டாரங்கள் திருத்தங்கள் கொண்டுவரவிருக்கின்றன. இந்த திருத்தங்கள் புகுத்தப்பட்டால், அமெரிக்க திடீர் தாக்குதல்படைகள், ஜப்பானில் நிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பார்வையாளர் தங்குமண்டபம்

மட்டக்களப்பு மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தினரால் மட்டக்களப்புப் பிரதான வைத்தியசாலைக்கு நோயாளரைப் பார்க்க வருபவர்களின் நலன்கருதி வைத்தியசாலை வளவினுள் பார்வையாளர் தங்குமண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. (அ)




சேர்கோப்பூர்

36% (3, 4, டி. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறுள்ள அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், இடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது. சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் கிருமிநாசினிகளைப் பாவியுங்கள்

இலங்கையில் பாயர் கிருமிநாசினிகளைத் தயாரிப்போர்

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 98568, 96831-4

450 மில்லி லீட்டர் ரூபா 33-50
3·25 லீட்டர்கள் ரூபா 220-00

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

நாகம்மாள் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன்-சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை
(புதிய பிரதி)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்
(புதிய பிரதி)

ராஜா (யாழ்நகர்) இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
விஜயா
நாகேஷ்
திருடன்
(புதிய பிரதி)

வெற்றிகரமான 8 வது வாரம்
வின்ஸர் (காங்கேசன்துறை) தொ. பேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணச்சித்திரம்)

சாந்தி யாழ் நகர் போன்: 7642
10-30, 2-30, 6-30, 9 45
கமல், ஜெயசித்ரா, சிவகுமார், கே. பாலச்சந்தரின்
சொல்லத்தான் நினைக்கிறேன்
(புத்தம் புதிய பிரதி)
23-5-80 "SHARK'S TREASURE"
(color)

3-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி
வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
✱ கமலஹாசன் (இருவேடங்களில்)
✱ ஸ்ரீதேவி மற்றும் பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், ரசிகர்களுக்கு முற்பதிவு செய்யப்படும்.

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30 6-30; 9-30
சிவாஜி- விஜயா நடித்த தங்கப்பதக்கம்

சிறீ (யாழ்நகர்) போன்: 7690
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி -லதா ஞானக்குழந்தை

வெற்றிகரமான 5-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராஜஸ்ரீ-ஜெயச்சந்திரன்
ராமலிங்கம் -டி.கே. சந்திரசேகரம்- V. R. ஸ்ரீநடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக் கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்

மனோஹரா A யாழ்ப்பாணம்
GRAND NEW RELEASE
Daily 5 Shows
LAST WORLD IN GIANT ENTERTAINMENT
Michael Gough—Jess Contard in
KONGA
(Color) King of Terror


மிருசுவில்

# படித்த பெண்கள் விவசாயத் திட்டம்: 129 வீடுகள் அமைக்கப்படும்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மிருசுவில் படித்த பெண்கள் விவசாயத் திட்டத்தில் சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 129 வீடுகள் கட்டுவதற்கு தேசிய வீடமைப்பு இலாகா நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் முதல் கட்டவேலைகளாக தற்பொழுது எழுபது வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 70 வீடுகள் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடை முறைக் கெடுக்கப்பட்ட போதும் கட்டிடப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக இவ் வீடுகள் பூர்த்தியடைவதற்கு தாமதமேற்பட்டுள்ளதாக இத்திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெண்கள் விவசாய குடியேற்றத் திட்டங்களில் மிருசுவில் திட்டம் முதன்மை வாய்ந்தது குறிப்பிடத் தக்கது.

## நம்பிக்கை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை இறக்குமதி செய்து விவசாயிகளது வயிற்றிலடிக்கிறது. தமிழ்மக்களது பல்வேறு உரிமைகளை மறுக்கிறது ஆனால் இச்சமயத்தில் அரசாங்கத்தை துதிபாடி எமது மக்களை ஏமாற்றும் விதத்தில் தலைவர்கள் நடக்கிறார்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஒரு சிலர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று மட்டும் நாம் கேட்கவில்லை. அமைப்பில் அடிப்படை மாற்றம் செய்யப்பட வேண்டும் ஒரு விடுதலை இயக்கமாக எமது இயக்கம் மாற வேண்டும் என்றார்.

திரு. சோமசுந்தரம் மகேசன் பேசும்போது தலைமையைப் பற்றி விமர்சித்தால் அவர்கள் விடும் பிழைகளை சுட்டிக் காட்டினால் இளைஞர்களுக்கு அரசியல் அறிவு போதாது என்கிறார்கள் அந்த அரசியல் அறிவை ஊட்டத் தலைவர்களாகிய நீங்கள் ஏன் தவறிவிட்டீர்கள் என நாம் கேட்கிறோம். உணர்ச்சிகளை ஊட்டி இளைஞர்களை எப்படியெல்லாமோ சிந்திக்க வைத்தவர்கள் இன்று இளைஞர்களை அடக்க முனைவது வேதனையை ஏற்படுத்துகிறது என்றார்.

மகளிர் பேரவைத் தலைவி திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை பேசுகையில் மகளிர் பேரவை ஒரு சிலரால் மனம் போன போக்கில் செயல்படுத்தப்படுகிற தென்றும் அதனுள் ஒரு கட்டுக்கோப்பு இல்லையென்றும் கூட்டங்கள் கூடாமலும் அறிக்கைகள் விடப்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார்

மற்றும் திரு. இறைகுமாரன் திரு. தங்கவேலயும் உட்பட பலர் பேசினர்.

பெருந்தொகையான இளைஞர்களும் பெரியோர்களும் கலந்து கொண்டனர்.

## மாதிரிக் கிராமத்தில் சிரமதானம்

(மன்னார்)

பிரதமர் ஆர். பிரேமதாசாவின் உத்தரவின் பேரில் குஞ்சுக் குளம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாதிரிக் கிராமத்தில் நேருங்கன் இளைஞர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 100 இளைஞர்கள் கழகத்தின் தலைவர் ஜனுப் கல்தாரின் தலைமையில் சிரமதான வேலைகளில் ஈடுபட்டனர்.


ஹரன் சாவகச்சேரி
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—விஜயா
இதோ எந்தன் தெய்வம்
(புதிய பிரதி)


# இன்றைய பலன்

வைகாசி மாதம் 8-ம் திகதி புதன்கிழமை 21-5-1980

மேடம்: பூமியால் இலாபமுண்டு, புத்திரர் புகழும் சேரும், பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும் உடல் நலம் பாதிக்கப்படுமாகையால் வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக் கொள்ளவும்.

இடபம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும், சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும், அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வு கிடைக்கலாம்.

மிதுனம்; பூமியால் இலாபமுண்டு, புத்திரர் புகழும் சேரும், பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும், உடல் நலம் பாதிக்கப்படுமாகையால் வாழ்வுப் பதார்த்தங்களை நீக்கிக் கொள்ளவும்.

கடகம்: திருடர் பயத்துக்கு இடமுண்டு, தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும், தொழில்புரியும் இடத்தில் சக தொழிலாளர்களுடனும் ஒத்துழைப்பது அவசியம். பொறுமையைப் பேணவும்.

சிங்கம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடு புகுந்போடும். வாழ்க்கையில் சோர்வுக்கும் இடமுண்டு

கன்னி: திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும், வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

துலாம்: ஆணைப் போக்கு அடிசறுக்க வைக்கும், பின்னணியில் மோசடிகளை நடைபெறலாம். மேலதிகாரிகளின் கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும், முன்யோசனையுடன் செயலாற்றுக.

விருச்சிகம்: சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டி லேயே பூசல் தலைதூக்கும் உஷாராக இருக்க வேண்டும்

தனுசு; நடுநிலை தவறாது நல்லதைச் செய்வீர்கள், உங்கள் புத்திக்கூர்மையை மற்றவர்கள் பாராட்டுவார்கள் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியைக் கொடுக்கும். பழைய நண்பரின் சந்திப்புக் கிடைக்கும்.

மகரம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும் எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும், உடன் பிறந்தவர்களாலேயே தொல்லைகள் தோன்றக்கூடும்.

கும்பம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் இடம்பெறும். எதிர்ப்புகள் மறைந்து சமாதான சூழ்நிலை உருவாகும், கண்ணியம் சேரும்,

மீனம்: புதிய தலையிடி தலைதூக்கும், வணிகர்களின் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும் மாணவர்கள் உணர்ச்சி வசப்படாதிருத்தல் நன்று.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## உதவி அரசாங்க அதிபராக பதவி உயர்வு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட காணி அதிகாரிகளில் ஒருவரான திரு. ஏ. எம். எம். குலநாயகம், யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார். உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் இப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

காணி இலாகாவின் கீழ் காணி உத்தியோகத்தராக பல ஆண்டுகள் சேவையாற்றிய திரு குலநாயகம், கடந்த பல வருடங்கள் யாழ்மாவட்டக் காணி உத்தியோகத்தராக பணியாற்றி வந்துள்ளார். மு ங்காவில் படித்த வாலிபர் திட்டம், மிருசுவில் படித்த பெண்கள் திட்டம் ஆகிய உணவுற்பத்தித் திட்டங்களுக்கும், வேறு பல விவசாயக் குடியேற்றத்திட்டங்களுக்கும் இவர் பொறுப்பாக இருந்து இத் திட்டங்கள் பூரணத்துவம் பெற சேவையாற்றியது குறிப்பிடத்தக்கது. மிருசுவில் பகுதி கிராமாட்சி மன்ற விசேஷ ஆணையாளராகவும் கடமையாற்றி வரும் இவர், இலங்கை நிர்வாக சேவைகளில் சிறப்புச் சித்தியடைந்தவர்.

## திருக்குறள் மகாநாடு

(வண்ணார்பண்ணை)

இலங்கைத் தமிழ் மறைக் கழகத்தின் இருபதாவது மகாநாடு இம்மாதம் 29ம், 30ம், 31ம் திகதிகளில் வேலணையில் நடைபெறவிருக்கிறது.

வேலணை முருகன் கோவில் முன்றலில் அமைக்கப்படும் பேரம்பலப் புலவர் அரங்கில் ஆரம்பமாகும் இந்த மகாநாட்டு வைபவத்தில் முதல் நிகழ்ச்சியாக திருக்குறள் ஏட்டுச்சுவடி ஊர்வலம் இடம் பெறவிருக்கிறது. இவ்வூர்வலத்தின்போது அலங்கார ஊர்திகள் பவனி வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வேலணையில் நடைபெறும் இந்த இருபதாவது திருக்குறள் மகா நாட்டில் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்மறைக் கழகத்தின் நீண்ட காலத் தலைவருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட "தமிழ் மறை விருந்து" என்னும் கட்டுரைத் தொகுப்பும் வெளியிடப்படும்.

## நெல்லியடி நூலகத்தில் பாடநூல்கள்

(உடுப்பிட்டி)

நெல்லியடிப் பட்டின சபைப் பொது நூலகத்தில் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பாட நூல்கள் இடம் பெறவுள்ளன.

இதற்கென நெல்லியடிப் பட்டின சபை 2, 000 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

விஞ்ஞானம், கணிதம், பொருளியல், இலக்கிய நூல்களே பிரஸ்தாப நூல் நிலையத்தில் வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை நெல்லியடிப் பட்டின சபைச் செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் மேற்கொண்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

